(எ-12)

## கல்விமான் காரை.சுந்தரம்பிள்ளை காலமானார்



யாழ்ப்பாணம்,செப்.23

கலாநிதி (கவிஞர்) காரை.சுந்தரம்பிள்ளை நேற்றுமுன்தினம் இரவு லண்டனில் காலமானார். சிறுநீரகக் கோளாறினால் சிலகாலம் பாதிக்கப்பட்டிருந்த அவரது உடல்நிலை இந்தமாதம் முற்பகுதியில் மோசமடையத் தொடங்கியது.

இறக்கும் போது அவருக்கு வயது 66.

லண்டன் பல்கலைக்கழகத்தின் பட்டமும் நாடகவியல் டிப்ளோமாவும் இரண்டு முதுமாணிப்பட்டங்களும் நாடக ஆய்வுக்கான கலாநிதிப் பட்டமும் பெற்ற இக்கல்விமான் நான்குமுறை சாகித்திய மண்டலத்தின் இலக்கியப் பரிசுபெற்றார்.

பலாலி ஆசிரிய கலாசாலையின் விரிவுரையாளராகவும் கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபராகவும் பணியாற்றி ஓய்வு பெற்ற சுந்தரம்பிள்ளை 'சங்கிலியம்' , 'தேனாறு', 'வள்ளி', 'பாதைமாறியபோது' முதலிய கவிதை நூல்களையும் 'ஈழத்து இசை நாடக வரலாறு''நடிகமணி வி.வி வைரமுத்து வாழ்வும் அரங்கும்', 'இந்து நாகரிகத்தில்கலை', 'சிங்களப் பாரம்பரிய அரங்கு', 'மலையகத்துக் காமன் கூத்து' ஆகிய ஆய்வுகளையும் செய்தவர்.

கலாநிதிப் பட்டத்துக்காக அவர் செய்த 'வட இலங்கையின் பாரம்பரிய அரங்கு ' என்ற ஆய்வு பாராட்டுப் பெற்றது; தமிழ் நாட்டில் வெளியிடப்பட்டது.

அறுபது, எழுபதுகளில் கவியரங்கு என்ற இலக்கிய வடிவத்தை யாழ்ப்பாணத்தில் மக்களிடையே கொண்டு சென்ற முன்னோடிகளில் காரை. சுந்தரம்பிள்ளை குறிப்பிடத்தக்கவர். (அ)

## காரை. சுந்தரம் பிள்ளை லண்டனில் காலமானார்

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் முன்னாள் அதிபரும் புகழ் பூத்த கவிஞரும், நாடகக் கலைஞருமான கலாநிதி காரை. செ.சுந்தரம்பிள்ளை நேற்று முன்தினம் புதன் கிழமை இரவு லண்டன் ஈலிங் ஆஸ்பத்திரியில் காலமானார்.

கடந்த சில மாதங்களுக்கு முன் லண்டன் சென்றிருந்த இவர், அங்கு நோய் வாய்ப்பட்ட நிலையில் கடந்த ஒரு மாதமாக லண்டன் ஈலிங் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு நேற்று முன்தினம் அங்கு காலமானார்.

காரைநகர் களபூமியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், மிகச் சிறந்த நாடகக் கலைஞராகவும், நாடக ஆசிரியராகவுமிருந்ததுடன் வட மோடி நாட்டுக் கூத்திலும் சிறந்து விளங்கினார்.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் ஆசிரியராகப் பணிபுரிந்த இவர் காரைநகர் இந்துக் கல்லூரி அதிபராகவும் அதன் பின் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி அதிபராகவுமிருந்து ஓய்வு பெற்றார்.

'சங்கிலியம்' என்ற இவரது வரலாற்று காவியத்திற்கு இலங்கை அரசின் தேசிய சாகித்திய விருது கிடைத்தது.

'தேனாறு', 'பாதை மாறிய போது' போன்ற கவிதை நூல் தொகுப்புகளையும் வெளியிட்டார். பாட நூல்கள் பலவற்றையும் எழுதியுள்ளார்.

## காரை.சுந்தரம்பிள்ளையின் நினைவஞ்சலி நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம்,ஒக்.23

கவிஞர் கலாநிதி காரை. செ.சுந்தரம்பிள்ளையின் நினைவு அஞ்சலி நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கலாநிதி க.குணராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிகஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், கிறிஸ்தவ இறையியல் கல்லூரி முதல்வர் கலாநிதி சு.ஜெபநேசன் அடிகளார், வலிகாமம் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், முன்னாள் அதிபர் ஆ.சபாரத் தினம், சோ.பத்மநாதன், கோப்பாய் ஆசி ரிய கலாசாலை அதிபர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி, வே.யுகபால சிங்கம், இ.சங்கர், நவாலியூர் நா.செல்லத்துரை, வேல்.ஆனந்தன் ஆகியோர் அஞ்சலி உரைகளை நிகழ்த்துவர்.

தொடர்ந்து கவிதாஞ்சலி நிகழ்வும் இடம்பெறும். (8-204)

## மரண அறிவித்தல்



### கலாநிதி கவிஞர் காரை செ.சுந்தரம்பிள்ளை

(முன்னாள் அதிபர் - ஆசிரியர் பயிற்சி கலாசாலை, கோப்பாய்)

காரைநகர், களபூமியைப் பிறப்பிடமாகக் கொண்ட கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை அவர்கள் 21.09.2005 (புதன் கிழமை) லண்டனில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற செல்லர் - தங்கம் தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற அல்வாய் முருகேசு-லக்சுமி, கமலவேணி தம்பதிகளின் மருமகனும், இந்திராவதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நல்லதம்பி, லக்சுமி மற்றும் பரமேஸ்வரி, வள்ளியம்மை ஆகியோரின் சகோதரனும், கந்தவரோதயன், ராஜவரோதயன், இந்திரோதயன் ஆகியோரின் மைத்துனரும், கௌசல்யா, மாதவி, பூங்குன்றன், திருப்பரங்குன்றன் ஆகியோரின் தந்தையும், சத்தியலிங்கம், சிவலீலன், சங்கீதா ஆகியோரின் மாமனாரும், ஷைந்தவன், சுருதி, லக்ஷ்மி, சேயோன், சாருகன் ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் லண்டனில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

- தகவல் குடும்பத்தினர்.

47, The Heights,<br>Northolt,<br>Middx UB5 4BP,<br>U.K.<br>Tel: 0044-2088691058

BP/G/02,<br>Manning Town Flats,<br>Colombo-08,<br>T.P: 011-2699234

## கவிஞர் காரை. சுந்தரம்பிள்ளை அஞ்சலி நிகழ்வு

அமரர் கலாநிதி காரை செ.சுந்தரம்பிள்ளையின் அஞ்சலி நிகழ்வு கடந்த ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் முன்னாள் மாநகர சபை ஆணையாளர் கலாநிதி க.குணராசா (செங்கை யாழியான்) தலைமையில் இடம்பெற்றது.

கிறிஸ்தவ இறையியல் கல்லூரி முதல்வர் பேராயர் சு.ஜெபநேசன், வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், கவிஞர் சோ.பத்மநாதன், 'உதயன்' பிரதம ஆசிரியர் வ.கானமயில்நாதன், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி, சென். ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியர் வே.யுகபாலசிங் கம், மூத்த பத்திரிகையாளர் இ.சங்கர், கலாபூஷணம் நவாலியூர் நா.செல்லத்துரை, நடனக்கலைஞர் வேல் ஆனந்தன் ஆகியோர் அஞ்சலி உரைகளை நிகழ்த்தினர்.

யாழ்.பல்கலைக்கழகப் பேராசியர் சி.சிவலிங்கராசா, கவிஞர் கல்வயல் வே.குமாரசாமி, த.ஜெயசீலன் ஆகியோர் அஞ்சலிக் கவிதை படித்தனர்.

இந்த நிகழ்வில் கவிஞர்கள், படைப்பாளிகள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டு மறைந்த கவிஞருக்கு அஞ்சலி செலுத்தினர். (ஒ-7)

# மரண அறிவித்தல்கள்

## கலாநிதி காரை செ.சுந்தரம்பிள்ளை

(முன்னாள் அதிபர், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, கோப்பாய்)



காரைநகர் பிட்டியெல்லை களபூமியைப் பிறப்பிடமாகக் கொண்ட கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை அவர்கள் (21.09.2005) புதன்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் இன்று (25.09.2005) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். அத்துடன், களபூமி காரை நகரில் மாலை 4.30 மணிக்கு அஞ்சலி நிகழ்வும் இடம்பெறும்.

*தமிழகம், பிட்டி எல்லை, களபூமி, காரைநகர்.* (40434) (33-15-17)

**தகவல்:** முருகையா வள்ளியம்மை (சகோதரி), மைத்துனர்

# கண்ணீர் அஞ்சலி



தண்ணீர் கடல் கடந்து
தாய் நாடு வரவில்லை
கண்ணீர் கடலாடு......
காணிக்கை

எமது நிறுவன முன்னைநாள் ஆசிரியரும்
ஆலோசகரும் நிறுவனக் கீத
எழுத்துருக் கவிஞருமான
அமரத்துவ கலாநிதி

**காரை.செ.சுந்தரம்பிள்ளை**

அவர்களுக்கு எம் இதய அஞ்சலிகள்.

The Express Institute
Irupalai, Kopay.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், ஆளணியினர்.

(அ-45299) (25-34-12)

# இதய அஞ்சலி



சாகித்திய மண்டல தேசிய விருதுகள் பல பெற்ற கல்விமானும் முன்னாள் கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபருமான கலாநிதி கவிஞர் காரை

**செ.சுந்தரம்பிள்ளை**

அவர்கள் காலமான செய்தி அறிந்து மிக்க துயர் அடைகின்றோம்.

எமது சனசமூக நிலைய கிராம வளர்ச்சியில் பெரும் பங்காற்றிய அமரர் அவர்களுக்கு இதய அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்வதோடு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இளங்கோ சனசமூக நிலையம்,
இளங்கோ விளையாட்டுக் கழகம்,
அல்வாய் வடக்கு, அல்வாய்.

(40533)(26.45.15)

# மரண அறிவித்தல்கள்

## கலாநிதி கவிஞர் காரை. செ. சுந்தரம்பிள்ளை

(முன்னாள் அதிபர், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, கோப்பாய்)



காரைநகர் களபூமியைப் பிறப்பிடமாகக் கொண்ட கலாநிதி காரை. செ.சுந்தரம்பிள்ளை அவர்கள் 21.09.2005 புதன்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லர் - தங்கம் தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற அல்வாய் முருகேசு - லக்சுமி, கமலவேணி தம்பதியரின் மருமகனும், இந்திராவதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற நல்லதம்பி, லக்சுமி மற்றும் பரமேஸ்வரி, வள்ளியம்மை ஆகியோரின் சகோதரனும் கந்தவரோதயன், ராஜவரோதயன், இந்திரோதயன் ஆகியோரின் மைத்துனரும் கௌசல்யா, மாதவி, பூங்குன்றன், திருப்பரங்குன்றன் ஆகியோரின் தந்தையும் சத்தியலிங்கம், சிவலீலன், சங்கீதா ஆகியோரின் மாமனாரும் ஷைந்தவன், சுருதி, லஷ்மி, சேயோன், சாருகன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'ஆனந்தகானம்', ஆவரங்கால், புத்தூர்.*
*T.P.: 021 4591816.*

*47, The Heights, Northolt, Middx UB5 4BP, U.K.*
*T.P.:0044 20 88691058*

**தகவல்:** குடும்பத்தினர்.

(40340)(30-34-12)

# வணங்கி அஞ்சலி செய்கின்றோம்

எங்கள் கலாசாலையின் முன்னாள் அதிபர்



**கலாநிதி கவிஞர் காரை. செ.சுந்தரம்பிள்ளை**

அவர்களின் மறைவுச் செய்தியறிந்து மிக்க துயரடைகின்றோம். அமரரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வணங்கி அஞ்சலி செய்கின்றோம்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலைக் குடும்பம்.

(40370)(30-11-45)

# கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவன வளர்ச்சியின் ஆரம்பகால
இந்துநாகரிகத்துறை ஆசிரியர் கலாநிதி

**காரை. S.சுந்தரம்பிள்ளை**

அவர்களின் திடீர் மரணச் செய்தி கேட்டு
கலங்கி நிற்கின்றோம்.
அன்னாரின் இழப்பால் துயரில் மூழ்கி
இருக்கும் குடும்பத்தவரிற்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு,
அன்னாரின் ஆத்மா சாந்திபெற
வேண்டுகின்றோம்.

**விக்னா கல்வி நிறுவனம்.** (40374) (30-11-45)

அதிபர், ஆசிரியர்கள்,
ஊழியர்கள்.

# மரண அறிவித்தல்



## கலாநிதி கவிஞர் காரை செ.சுந்தரம்பிள்ளை

(முன்னாள் அதிபர், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, கோப்பாய்)

காரைநகர் களபூமியைப் பிறப்பிடமாகக் கொண்ட கலாநிதி காரை செ.சுந்தரம்பிள்ளை அவர்கள் 21.09.2005 அன்று லண்டனில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற செல்லர்- தங்கம் தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற அல்வாய் முருகேசு- லக்சுமி, கமலவேணி தம்பதிகளின் மருமகனும், இந்திராவதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நல்லதம்பி, லக்சுமி மற்றும் பரமேஸ்வரி, வள்ளியம்மை ஆகியோரின் சகோதரனும், கந்தவரோதயன், ராஜவரோதயன், இந்திரோதயன் ஆகியோரின் மைத்துனரும், கௌசல்யா, மாதவி, பூங்குன்றன், திருப்பரங்குன்றன் ஆகியோரின் தந்தையும், சத்தியலிங்கம், சிவலீலன், சங்கீதா ஆகியோரின் மாமனாரும், ஷைந்தவன், சுருதி, லக்ஷமி, சேயோன், சாருகன் ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் ஈமக் கிரியைகள் லண்டனில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

47, The Heights, Northolt, Middx UB5 4BP, U.K., Phone: 0044 20 88691058
BP/G/02, Manning Town, Flats, Colombo-08, Phone: 011 2699234